விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 186 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 08 சனிக்கிழமை (22.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பௌத்தத்தைப் பாதுகாத்து வளர்ப்பது அரசியலமைப்பின் பொறுப்பாகும்



### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

பௌத்த மதத்தைப் பாதுகாத்து வளர்ப்பது அரசியலமைப்பின் பொறுப்பாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொசனை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில்,

இலங்கை எதிர்நோக்கும் அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து அபி 15

பொசனை முன்னிட்டு

## யாழ்.போதனாவில் 125க்கும் மேற்பட்டோருக்கு கண் புரை சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

பொசன் பண்டிகை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் 125 இற்கும் மேற்பட்டவர்களுக்கு நேற்று கண்புரை சிகிச்சையளிக்கப்பட்டது.

அலாக்கா மற்றும் ஆனந்தா பவுண் 02

ஜனாதிபதியுடன் ராஜபக்ஷக்கள் இல்லாத

# மொட்டுக் கட்சியினரின் புதிய அரசியல் கூட்டணி

### ரணிலின் நடவடிக்கைக்கு பசில் அதிருப்தி எவருக்கும் அடிபணியோம் எனவும் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டணி அமைக்கத் தயாராகும் ராஜபக்ஷக்கள் இல்லாத மொட்டுக் கட்சியினரின் புதிய அரசியல் கட்சி தொடர்பில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ அதிருப்தி வெளியிட்டுள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

18 வயது இளைஞன்

## அல்வாயில் சடலமாக மீட்பு

(கரணவாய்)

அல்வாய் செல்லையா வீதியில் 18 வயது இளைஞன் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 15

## நவாலியில் 5 வாள்களுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிளை வைத்திருந்த இளைஞனிடமிருந்து, 5 வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், 15

## தையிட்டி விகாரைக்கு எதிராக நேற்றும் போராட்டம்



15

தேர்தலின் பின் யார் ஆட்சியமைத்தாலும்

## இந்தியத் திட்டங்கள் தடையின்றி முன்னெடுக்கப்பட வேண்டும்



### ஜெய்சங்கர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் தேர்தல்களின் பின்னர் புதிய அரசாங்கம்பொறுப்பை ஏற்றாலும் இந்தியாவின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தடையின்றி முன்னெடுக்கப்பட வேண்டும்என இந்திய 02

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து

## கல்லுண்டாய் மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம்



15

நெடுந்தீவில் இளைஞன் படுகொலை

## பொலிஸ் நிலையம் முன் நீதி கோரி போராட்டம்




15

## மன்னாரில் ஹயஸ் விபத்து பெண் உயிரிழப்பு 14 பேர் படுகாயம்

(மன்னார்)

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, முருங்கன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இசைமாலைத் தாழ்வுப் பகுதியில் ஹயஸ் ரக வாகனம் மின் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வெளிநாட்டு துப்பாக்கியுடன் பாதாள உலகக் கும்பலை சேர்ந்த ஒருவர் கைது

(கொழும்பு)

தென் மாகாணத்தில் இரண்டு கொலைகளை செய்து, மேலும் இரண்டு கொலைகளை செய்வதற்கு பணம் பெற்றுக்கொள்ள முயற்சித்த பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த சந்தேக நபரொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் குழுவினால் பல்வேறு பிரதேசங்களில் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது சந்தேக நபர் அம்பலாங்கொடை, வத்துகெதர பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பலாங்கொடை, வத்துகெதர பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட அனுமதிப் பத்திரம் அற்ற ரிவோல்வர் வகை துப்பாக்கி ,12 தோட்டாக்கள் மற்றும் 10 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-7,10)

# கொழும்பை வந்தடைந்த ஜப்பான் போர்க் கப்பல்



(கொழும்பு)

ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படையின் நாசகாரி கப்பல் ஒன்று, கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது.

ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படையின் (JMSDF) சமிதாரே (DD – 106) என்ற இந்த கப்பல், நாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இரண்டு நாட்களுக்கு இந்த கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் என இலங்கை கடற்படை அறிவித்துள்ளது.

150.5 மீ நீளமுள்ள இந்த கப்பலில் 202 பணியாளர்கள் காணப்படுகின்றனர்.

இந்தநிலையில், குறித்த ஜப்பானிய கப்பல், தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு, இன்று (ஜூன் 22) இலங்கைத் தீவை விட்டுப் புறப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, கப்பல் கொழும்பு கடற்பகுதியில் இலங்கை கடற்படைக் கப்பலுடன் கடவுப் பயிற்சியில் (PASSEX) ஈடுபடும் என்றும் இலங்கை கடற்படை அறிவித்துள்ளது. (ம-7,10)

## மொட்டுக்...

ரணில் விக்கிரமசிங்கவுடனான விசேட சந்திப்பின் போதே இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் ராஜபகஷக்கள் இல்லாத மொட்டுக்கட்சியினர் சிலர் கூட்டணி அமைப்பது தொடர்பில் பிரசன்ன ரணதுங்க மற்றும் ரணில் விக்கிரமசிங்க இடையே விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.குறித்த கூட்டணி சார்ந்த எந்த ஒரு நிகழ்வுகளிலும் ராஜபக்ஷக்களை இணைத்துக் கொள்வதில்லை என பிரசன்ன ரணதுங்க, ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துரைத்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பசில் ராஜபக்ஷ இடையிலான சந்திப்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட மொட்டுக்கட்சியின் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சில அங்கத்தவர்கள் கலந்துகொண்டதாகவும், இந்த செயற்பாடானது திருப்திகரமானதாக அமையவில்லை என பசில் ராஜபகஷ எடுத்துரைத்துள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதியுடனான சந்திப்பானது அவர் விடுத்த அழைப்பின் பேரிலேயே முன்னெடுக்கப்பட்டதாகவும் ராஜபக்ஷக்கள் எவருக்கும் அடிபணிய தயாரில்லை எனவும் கடுமையான கருத்துக்களை பசில் இதன்போது முன்வைத்துள்ளார்.

எனினும் மொட்டுக் கட்சியினரையோ, வேறு கட்சியினரையோ இணைத்துக்கொள்வது ஜனாதிபதியின் தனிப்பட்ட அரசியல் முயற்சியாக இருந்தாலும் ராஜபக்ஷக்கள் இல்லாத எந்த ஒரு கூட்டணிக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என பசில் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். (ம-7,10)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

Western Union WU MoneyGram Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

077 839 3974

(1305)


## மன்னாரில்...

கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணித்த பெண் ஒருவர் உயிரிழந்ததுடன் 14 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவமானது நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கல்முனையில் இருந்து மன்னார் மறிச்சுக்கட்டி பிரதேசத்திற்கு குறித்த வாகனத்தில் வருகை தந்தவர்களின் வாகனம் முருங்கன், இசைமாலை தாழ்வு, நரிக்காடு வளைவு பகுதியில் உள்ள மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த அனைவரும் முருங்கன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக 7 பேர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இவர்களில் வயோதிபப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வாகனத்தில் பயணித்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் என தெரியவருகிறது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,285)

## யாழ். போதனா...

டேசனின் பங்களிப்புடன் 51 இராணுவப் படைப்பிரிவின் உதவியுடன் குறித்த கண் நோயாளர்களுக்கான சிகிச்சை வைத்திய கலாநிதி மலரவனின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாண நாக விகாரையின் விகாராதிபதி தலைமையில் பொசன் ஆராதனை நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ். மாவட்ட இராணுவ கட்டளை தளபதி, வடக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர், மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர், வைத்தியர்கள் தாதியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.(ம-7,10,33)

# ஜனாதிபதித் தேர்தலில் 8 ஆயிரம் கண்காணிப்பாளர்கள்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக 8 ஆயிரம் உள்ளூர் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக பெப்ரல் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பைச் சேர்ந்த கணக்கெடுப்பு குழுக்களை கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முன் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடுகளின் சர்வதேசத் தேர்தல் கண்காணிப்பு குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ம-7,10)

## இந்திய...

வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை தேர்தல்களை எதிர்கொண்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் தனது இலங்கை விஜயத்தின் போது மீள்சக்தி திட்டங்கள் போன்ற இந்தியாவின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தடையின்றி முன்னெடுக்கப்படுவது அவசியம் என்பதை ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

ஜெய்சங்கர் அவரது சந்திப்புகளின் போது சூரிய சக்தி திட்டங்கள் இந்தியா இலங்கைக்கு இடையே முன்மொழியப்பட்ட பெற்றோலிய குழாய் திட்டம் போன்றவை குறித்து விசேடமாக குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் எந்த அரசாங்கம் பொறுப்பேற்றாலும் இந்தியாவின் நிதி உதவியுடனான திட்டங்கள் தொடரவேண்டும் என ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

மீண்டும் இந்திய வெளிவிவகார அமைச்சராக பதவியேற்ற பின்னர் முதல் விஜயத்தை இலங்கைக்கு மேற்கொண்டுள்ளமை குறித்து மகிழ்ச்சியடைவதாக ஜெய்சங்கர் எதிர்கட்சி தலைவரை சந்தித்தவேளை தெரிவித்துள்ளார். (ம-7,10)


Annual General Meeting
The Vembadi Girls' High School
Old Girls' Association

The Annual General Meeting will be held as scheduled below:

Date: 7 July 2024
Time: 9:00 am
Venue: Trimmer Hall, Vembadi Road, Jaffna (opposite to the road between Jaffna Central Colleage and Central playground)

All members of Vembadi Girls' High School Old Girls Association, Jaffna are welcome.New members are welcome to JOIN our ASSOCIATION at the AGM or online.https://www.facebook.com/VOGAJaffna

The Secretary

(1294)



பதவி வெற்றிடம்

- தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு (இரு பாலாரும்)
- உதவி ஆசிரியர் (இரு பாலாரும்)
- தகைமை:- க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல்
- பொருத்தமானவர்கள் (22.06.2024) இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்.
- யாழ் நகரிற்கு அண்மையில் இருப்பவர்கள் மட்டும்.

பொது முகாமையாளர்
வலம்புரி

தொடர்பு:- 076 097 3121

வலம்புரி இல. 191, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு,கிழக்கில் சிங்கள பாடசாலைகள் இல்லாமல் இருப்பது கவலைக்குரியது

## கெவிந்து குமாரதுங்க பாராளுமன்றில் சுட்டிக்காட்டு



**(கொழும்பு)**

**நாட்டில் 25 மாவட்டங்களிலும் தமிழ் மொழிமூல ஆரம்ப வகுப்பு பாடசாலைகள் காணப்படுகின்றன. இந்நிலையில் வடக்கு மற்றும் கிழக்கில் சிங்கள மொழி மூல பாடசாலைகள் இல்லாமல் இருப்பது கவலைக்குரியது.**

இவ்வாறான நிலைமையில் எப்படி இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என சுயாதீன எதிரணியின் உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மகளிர் வலுப்படுத்தல் சட்ட மூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது, யுனெஸ்கோ பிரகடனத்தில் பிள்ளைகளுக்கு தாய் மொழியில் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். ஆனால், 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிங்கள மொழி மூல பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் ஏற்கனவே கேள்விகளை எழுப்பியுள்ளேன்.

கடந்த 5 வருடங்களை எடுத்துக்கொண்டால் 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்படும்போது 25 மாவட்டங்களிலும் தமிழ் மொழிமூல வெட்டுப்புள்ளிகள் வெளியாகின்றன.

யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள பின்னரும் கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் சிங்கள வெட்டுப்புள்ளிகள் கிடையாது. வடக்கு மற்றும் கிழக்கில் சிங்கள மொழிமூலம் ஆரம்பக் கல்வி பாடசாலைகள் இல்லை என்பதனையே காட்டுகிறது.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களே உங்களின் மன சாட்சியிடம் கேட்டுப் பாருங்கள்... யுத்த காலத்திலும் கூட கொழும்பு றோயல் கல்லூரியில் தமிழ்மொழி மூலம் வகுப்புகள் இடம்பெற்றன.

ஆனால், வடக்கு, கிழக்கில் சிங்கள மொழிமூலம் வகுப்புகள் ஏதும் இல்லை. மட்டக்களப்பில் எத்தனையோ சிங்களக் கிராமங்கள் உள்ளன. எத்தனையோ சிங்கள பாடசாலைகள் பிரபுக்களால் அமைக்கப்பட்டன. ஆனால், அவை இல்லாது இருக்கின்றன. இப்படி இருக்கையில் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை எவ்வாறு உருவாக்க முடியும் என அவர் கேள்வி எழுப்பியிருந்தார். (நி-6)

# தேர்தல்களுடன் விளையாடாதீர்கள்

## உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்

## மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்து



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளின்படி இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலையும், அடுத்த வருடம் பாராளுமன்றத் தேர்தலையும் நடத்தியே ஆக வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 வருடங்கள். பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலமும் 5 வருடங்கள். எனவே, அரமைப்பில் உள்ள ஒருசில ஓட்டைகளைக் காரணம் காட்டி மக்கள் ஆணை வழங்கும் தேர்தல்களுடன் எவரும் விளையாடக் கூடாது. தேர்தல்களை உரிய காலத்தில் நடத்த வேண்டும்.

இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியே தீர வேண்டும். ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க மொட்டுக் கட்சி அனுமதி வழங்காது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி ரணிலுக்கு அழுத்தம் எதையும் வழங்கவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளின்படி இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலையும், அடுத்த வருடம் பாராளுமன்றத் தேர்தலையும் நடத்தியே ஆக வேண்டும். ஜனாதிபதி மேற்படி வாக்குறுதிகளை மீறமாட்டார் என்று நம்புகின்றோம்." என அவர் தெரிவித்தார். (நி-6)

# உயர்தரப் பரீட்சை விண்ணப்பத்திற்கான கால அவகாசம் நீடிக்கப்படாது

## பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான விண்ணப்பங்களை விண்ணப்பிப்பதற்கான கால அவகாசத்திற்கான திகதியை - பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, ஜூலை 10 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி. அமித் ஜய சுந்தர தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic மற்றும் உத்தியோகபூர்வ கையடக்கத்தொலைபேசி செயலியான "DoE" இனை பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம்.

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் விண்ணப்பதாரிகள் அந்தந்த பாடசாலை அதிபரிடம் அனுமதி பெற்ற பின்னரே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எக்காரணம் கொண்டும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கால அவகாசம் நீடிக்கப்படமாட்டாது என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# உலக சந்தையில் சீனி விலை பாரியளவில் குறைவடைந்தது

(பிரேசில்)

உலக சந்தையில் சீனியின் விலை பாரியளவில் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரேசிலில் கரும்பு அறுவடை கடந்த 4 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு அதிகரித்துள்ளது.

இதனால், பிரேசிலின் சீனி உற்பத்தி 11.8 வீதம் அதிகரித்ததையடுத்து உலகளாவிய ரீதியில் விலை குறைவடைந்துள்ளது.

இந்நிலையிலேயே, சீனியின் விலை 2.32 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

# சிறுபோக நெல் கொள்வனவிற்காக சலுகை வட்டி வீதத்தில் கடன்

(கொழும்பு)

சிறுபோக நெல் கொள்வனவிற்காக சலுகை வட்டி வீதத்தில் கடன் வழங்கப்படவுள்ளது.

2024 சிறுபோகத்திற்கான நெல் கொள்வனவிற்காக சலுகை வட்டி வீதத்தில் கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 6000 மில்லியன் ரூபா வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படவுள்ளது.

சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள், நெல் களஞ்சிய உரிமையாளர்கள், மொத்த நெல் கொள்வனவாளர்களுக்கு இந்த கடன் வழங்கப்படவுள்ளது. (நி-6)



வரலாற்றுச்சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் தீர்த்தத் திருவிழா நேற்று பக்தி பூர்வமாக இடம் பெற்றது. (படங்கள்-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பட்கம்மின்ஸ் 'ஹட்ரிக்' அவுஸ்திரேலியா வெற்றி



ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று காலை நடைபெற்ற சூப்பர் 8 சுற்று போட்டியில் அமெரிக்கா மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதின.

இந்த போட்டியில் டாஸ் வென்ற அவுஸ்திரேலியா அணி முதலில் பந்துவீச முடிவு செய்தது. அதன்படி பட்டிங்கை தொடங்கிய வங்காளதேசம் அணிக்கு தொடக்க வீரர் டன்சித்ஹாசன் ரன் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். இவருடன் களமிறங்கிய லிட்டன் தாஸ் 16 ரன்களில் அவுட் ஆனார் அடுத்து வந்த கப்டன் நஜ்முல் ஹொசைன் ஷண்டோ 36 பந்துகளில் 41 ரன்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் அணி 20 ஓவரகளில் 8 விக்கெட்டுகளுக்கு 140 ரன்களை சேர்த்தது. அவுஸ்திரேலியா சார்பில் பட்கம் மின்ஸ் ஹட்ரிக் 3 விக்கெட்டுகளையும், ஆடம் ஜாம்பா 2 விக்கெட்டுகளையும், மிட்செல் ஸ்டார்க், மார்கஸ் ஸ்டாயினிஸ் மற்றும் கிளென் மேக்ஸ்வெல் தலா 1 விக்கெட் வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா அணி களமிறங்கியது. அந்த அணிக்கு டேவிட் வார்னர் மற்றும் டிராவிஸ் ஹெட் சிறப்பான தொடக்கத்தை கொடுத்தனர். இதனிடையே 11.2 ஓவர்களில் அவுஸ்திரேலியா அணி 2 விக்கெட்டுகளை இழந்து 100 ரன்களை எடுத்திருந்த போது, மழை குறுக்கிட்டது. தொடர்ந்து மழை பெய்த காரணத்தால் அவுஸ்திரேலியா அணி டக்வெர்த் லீவிஸ் முறைப்படி 28 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அவ்வணி சார்பில் டேவிட் வார்னர் 53 ரன்களுடனும்,கிளென் மேக்ஸ்வெல் 14 ரன்களுடன் களத்தில் இருந்தனர். பங்களாதேஷ் சார்பில் ரிஷத் ஹொசைன் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். (நி-6)

# சூர்யகுமார் அதிரடி
## ஆப்கானை வீழ்த்திய இந்தியா

ரி-20 உலகக் கிண்ண தொடரின் சூப்பர் 8 சுற்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. இந்த போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பட்டிங் செய்தது.

இந்திய அணிக்கு கப்டன் ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி முறையே 8 மற்றும் 24 ரன்களில் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த ரிஷப் பண்ட் 20 ரன்களை அடித்த நிலையில், சூர்யகுமார் யாதவ் அதிரடியாக ஆடி 53 ரன்களைக் குவித்தார்.

அடுத்து வந்த ஷிவம் துபே 10 ரன்களையும், ஹர்திக் பாண்ட்யா 32 ரன்களை அடித்தனர். இதன் மூலம் இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 181 ரன்களை சேர்த்தது. ஆப்கானிஸ்தான் சார்பில் பசல்ஹாக் பரூக்கி மற்றும் ரஷித் கான் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். நவீன் உல் ஹக் ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

182 ரன்களைத் துரத்திய ஆப்கானிஸ்தான் அணிக்கு சரியான தொடக்கம் கிடைக்கவில்லை. அந்த அணியின் ஹசரதுல்லா சசாய் மற்றும் இப்ராகிம் சத்ரான் 2 மற்றும் 8 ரன்களில் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த குல்பதின் நயிப் 17 ரன்களை சேர்த்தார்.

அசமதுல்லா ஓமர்சாய் 26 ரன்களை சேர்த்தார். நஜிபுல்லா சத்ரான் 19 ரன்களை சேர்க்க அடுத்து வந்த வீரர்களும் சொற்ப ரன்களில் ஆட்டமிழக்க. ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவர்களில் 134 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் இந்திய அணி 47 ரன்களில் வெற்றி பெற்றது.



இந்திய சார்பில் அர்ஷ்தீப் சிங் மற்றும் ஜஸ்பிரித் பும்ரா தலா 3 விக்கெட்டுகளையும், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுகளையும், ஜடேஜா மற்றும் அக்சர் பட்டேல் தலா 1 விக்கெட் வீழ்த்தினர். (நி-6)

# யூரோ கிண்ண கால்பந்து இத்தாலி அசத்தல்



ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான யூரோ கோப்பை கால்பந்து போட்டி ஜேர்மனியில் நடைபெற்று வருகிறது. ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ் உள்ளிட்ட 24 அணிகள் பங்கேற்றுள்ளன.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற போட்டியில் குரூப் "பி"-யில் இடம்பிடித்துள்ள இத்தாலி- ஸ்பெயின் அணிகள் மோதின.

ஆட்டத்தின் முதல் பாதியில் இரண்டு அணி வீரர்களால் கோல் அடிக்க முடியவில்லை. 2ஆவது பாதி நேர ஆட்டத்தில் ஸ்பெயின் அணி வீரர் ரிக்கார்டோ கலாஃபியோரி ஒரு கோல் அடித்தார்.

இதன்பின் இத்தாலி அணி வீரர்களால் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் 1-0 என்ற கோல் கணக்கில் இத்தாலியை வீழ்த்தி ஸ்பெ யின் அணிவெற்றி பெற்றது. இதன்மூலம் ஸ்பெயிண் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. இத்தாலி அணி அடுத்த போட்டியில் குரோஷியா வை எதிர்கொள்கிறது. (நி-6)

# இங்கிலாந்து- டென்மார்க் போட்டி சமநிலையானது

இங்கிலாந்து, டென்மார்க் அணிகள் மோதிய விறுவிறுப்பான "யூரோ" கிண்ண கால்பந்து லீக் போட்டி 1-1 என "டிரா" ஆனது.

ஜேர்மனியின் பிராங்க்பர்ட் நகரில் நடந்த "யூரோ" கிண்ண கால்பந்து "சி" பிரிவு லீக் போட்டியில் உலகின் "நம்பர்-5" இங்கிலாந்து அணி, 21ஆவது இடத்தில் உள்ள டென்மார்க் அணியை சந்தித்தது. இங்கிலாந்து அணிக்கு 18ஆவது நிமிடத்தில் ஹாரி கேன் ஒரு கோல் அடித்தார். இதற்கு 34ஆவது நிமிடத்தில் டென்மார்க்கின் மோர்டன் ஹுல்மண்ட் பதிலடி கொடுத்தார். முதல் பாதி முடிவில் போட்டி 1-1 என சமநிலை வகித்திருந்தது.


இரண்டாவது பாதியில் கடைசி நிமிடம் வரை போராடிய இரு அணி வீரர்களால் கூடுதலாக கோல் அடிக்க முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் "டிரா" ஆனது. இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

ஒரு வெற்றி, ஒரு "டிரா" என 4 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணி முதலிடத்தில் உள்ளது. அடுத்த இரு இடங்களில் (தலா 2 புள்ளி) டென்மார்க், சுலோ வேனியா உள்ளன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சியை விட்டு வெளியேறுங்கள்

## பொன்சேகாவுக்கு சஜித் தரப்பு பதிலடி



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவால் ஐக்கிய மக்கள் சக்தியில் தொடர்ந்தும் இருக்க முடியாவிட்டால் உடனடியாக கட்சியை விட்டு வெளியேறுமாறு சஜித் தரப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பாராளுமன்றில் நேற்றுமுன் தினம் சரத்பொன்சேகா முன் வைத்த கருத்துக்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே மேற்படி தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவை சிறந்த போர் வீரர் என ஐக்கிய மக்கள் சக்தி கௌரவித்த போதும் சிரேஷ்ட தலைவர்கள் தொடர்பில் குற்றச் சாட்டுக்களை முன்வைக்கின்றார் .

மேலும் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை கடுமையாக விமர்சிப்பது பொருத்தமான விடயம் அல்ல எனவும். கட்சியில் தொடர முடியாவிட்டால் உடனடியாக வெளியேறுமாறும் விதானகே தெரிவித்தார். (நி-6)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

அமரர் நிக்லஸ் எட்வேட் ஞாபகார்த்தமாக வடமராட்சி உதைபந்தாட்டச் சிரேஷ்ட சங்கம் நடத்தும் 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று ஆரம்பமானது.

காலை 9.15 மணிக்கு ஆரம்பித்து மாலை 5.45 மணிவரை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெறும்.

இதில் பதிவு செய்த கழகங்கள் உரிய நேரத்திற்கு சமூகம் அளிக் குமாறும். மேலதிக தகவலுக்கு வடமராட்சி உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கத்தின் தலைவர் ம. மதி அழகன் 076 8531 257 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (நி-6)



கரணவாய்கருணையம்பதி வெற்றிகாட்டுப்பிள்ளையார் ஆலய தேர் வெள்ளோட்ட பெருவிழா கடந்த திங்கட்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (படம்-மகாலிங்கம்)


# மரண அறிவித்தல்

பிறப்பு 07 - 11 - 1947



இறப்பு 19 - 06 - 2024

அமரர். **சங்கரப்பிள்ளை மயில்வாகனம்**

பூநகரி சித்தன்குறிச்சியை பிறப்பிடமாகவும் வட்டு வடக்கு சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை மயில்வாகனம் அவர்கள் (19.06.2024 ) புதன்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்புப்புதல்வனும் காலஞ்சென்ற வீரசிங்கம் - பகவதி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் செல்வராணியின் அன்புக்கணவரும் யுவமருகன், விஜிமருகன், யசோதை, மயூரிகா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜீவதாரணியின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற பார்வதி மற்றும் விஜயலட்சுமி,குலவீரசிங்கம், குணசேகரம், யோகேஸ்வரி, காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும் மனோகரன், நிற்சிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நாகரத்தினம், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் கணேசராஜா , இராசேந்திரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23.06 2024) நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-654)

வட்டு வடக்கு,சித்தன்கேணி. தகவல் -குடும்பத்தினர். 077 912 0430


# இராசிபலன்

22.06.2024
ஆனி 08 சனிக்கிழமை
பூரணை முற்பகல் 7.17 மணிவரை
மூலம் முன்னிரவு 7.02 மணிவரை

சுபநேரம் 2.54 - 4.24 மணிவரை
இராகு காலம் 8.54 - 10.24 மணிவரை

சந்திராஷ்டமம்.
பரணி, கார்த்திகை.

வளவன்

**மேஷம்** வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் மேலோங்கும், பெரிய மனிதர்களின் ஆதரவைப் பெறுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள்.

**கடகம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பல நாட்களாக செய்ய நினைத்த செயலொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**துலாம்** சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உடல் நலனில் அக்கறை கூடும்.

**மகரம்** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைனை கேட்டு நடப்பது நல்லது, தொழிலை வரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், அலைச்சல் சற்று அதிகரிக்கும்.

**ரிஷபம்** குடும்பத்தினரிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.

**சிம்மம்** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**விருச்சிகம்** கௌரவம் மிக்கவர்களின் சநதிப்பு இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

**கும்பம்** குடும்பத்தினரிடையே குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** நண்பர்களால் சில நன்மைகள் நடைபெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கன்னி** இல்லதில் சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**தனுசு** விருப்பங்கள் நிறைவேற வழி பாட்டை மேற் கொள்ள வேண்டிய நாள், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது.

**மீனம்** மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.


எங்கே நல்ல உள்ளம் இருக்கிறதோ அங்கேதான் சோதனைகளும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெல்லியடி வாணிபர் கழகத்தின் ஏற்பாட்டில் தனியார் விடுதி ஒன்றில் கடந்த புதன்கிழமை கௌரவிப்பு விழா இடம் பெற்றது.இந்நிகழ்வில் நெல்லியடியைச் சேர்ந்த 15 வர்த்தகர்கள் மற்றும் கல்வி, மருத்துவம், சமயம், சமூக சேவைகளில் ஈடுபடும் 4 சான்றோர்களுக்கும் நினைவுக் கேடயங்கள் வட மாகாண ஆளுநரால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (படங்கள்-மகாலிங்கம்)

# மாற்றுத் திறனாளிகளுக்கான செயற்கை அவயங்கள் பொருத்தும் முகாம்



(யாழ்ப்பாணம்)

யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான செயற்கை அவயங்கள் பொருத்தும் முகாம் கடந்த புதன் கிழமை நிறைவுக்கு வந்தது.

யாழில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரும், யாழ்.இந்திய துணை தூதுவரும் செயற்கை அவயங்கள் தயாரிக்கும் முறையினை பார்வையிட்டனர்.

இதனை தொடர்ந்து செயற்கை அவயங்கள் தயாரிப்பில் ஈடுபட்டவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. வடக்கு மாகாணத்தை சேர்ந்த 352 மாற்றுத் திறனாளிகளுக்கு 366 புதிய செயற்கை அவயங்கள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளதுடன் அவற்றை பராமரிக்கும் முறை தொடர்பான பயிற்சிகளும் இந்த விசேட முகாம் ஊடாக வழங்கப்பட்டன. (நி-6-33)

# இலங்கை-பாகிஸ்தான் உறவில் மீண்டும் கண்விழி வெண்படல தானம்

(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நீண்டகால உறவில் கண்விழி வெண்படலங்களும் உள்ளடங்குகின்றன.

இதன்படி இலங்கை நன்கொடையாளர்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட ஐந்து கண்விழி வெண்படலங்கள் நேற்று முன்தினம் லாகூருக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்தநிலையில் அவை பாகிஸ்தான் இராணுவ மருத்துவ பணியாளர்களால் பெறப்பட்டு, ராவல்பிண்டியில் உள்ள பாகி ஸ்தான் இராணுவ மருத்துவமனையில்கையளிக்கப்பட்டன.

சர்வதேச கண் வங்கியின் ஸ்தாபரான, மறைந்த ஹட்சன் சில்வாவினால் 1964 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங் கையின் கண் தானச் சங் கத்தின் ஊடாக உலகளவில் 88,000 இற்கும் அதிகமான கண் விழி வெண்படலங்கள் தானமாக வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் 36,000 இற்கும் மேற்பட்ட கண் வெண்படலங்கள், பாகிஸ்தானுக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளன.

எனினும், கொவிட் நோய்த் தொற்றின் பின்னர் நிறுத்தப்பட்டிருந்த பணி நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (நி-6)



வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் அறுவடை பருவ இதழின் 2 ஆவது இதழ் வெளியீடு நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

# உருவச்சிலை திறப்பும் சான்றிதழ் வழங்கலும்

(குருநகர்)

குருககர் சென் ஜேம்ஸ் கல்விமுன்னேற்றக் கழகம் மற்றும் பழைய மாணவர் சங்கம் இணைந்து நடத்தும் புனித ஜேம்ஸ் மகாவித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் யேக்கம் றோமனின் உருவச்சிலை திறப்பு விழாவும் க.பொ.த சாதாரண தரம் சத்தி பெற்ற மாணவர்களின் கௌரவிப்பும் பிரத்தியேக கற்கை நெறி சான்றிதழ் வழங்கல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணி க்கு குருநகர் கலாசார மண் டபத்தில் சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் ஓய்வு பெற்ற உப அதிபர் திருமதி.யூஜின் யூலியஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-6-106)


# தீக்காயங்களுடன் ஒருவர் மருத்துவமனையில் அனுமதி

(கரணவாய்)

மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வத்திராயன் வடக்கு தாளையடி கடற்கரையில் அமைந்துள்ள மீன் பிடி வாடியில் ஒருவர் தீக்காயங்களிற்கு உள்ளான நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 10:30 மணியளவில் வாடி தீப்பிடித்து எரிந்த நிலையில் பவானி எனப்படும் சரவணபவானந்தன் சிவகுமார் என்ற 43 வயதான நபர் தீக்காயங்களிற்கு உள்ளாகியிருந்த நிலையில் அந் நபர் மீட்கப்பட்டு மருதங்கேணி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-33-60)



யாழ்.கந்தர்மடம் அரசடி வீதி செல்வ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான தேர்த்திருவிழா நேற்று முன்தினம் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போடவே முடியாது

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதிக்கும் ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதிக்கும் இடையில் கட்டாயமாக நடத்த வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் மகிந்த தேசப்பிரிய இவ்வாறு தெரிவித்திருந்தார்.

செப்டெம்பர் 20 ஆம் திகதியிலிருந்து ஒக்டோபர் 17 ஆம் திகதிக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும்.

இந்த தேர்தலை பிற்போட முடியும் என எவரேனும் கூறினால், அவர்களின் மூளையை பரிசோதனைக்குட்படுத்தி பார்க்க வேண்டும்.

எக்காரணத்தினாலும் தேர்தலை பிற்போடுவது என்பது தவறு. வானமே இடிந்து தலைமேல் விழுந்தாலும் ஜனாதிபதித் தேர்தலை மட்டும் பிற்போட முடியாது. தேர்தலுக்கான முதற்கட்ட வேலைத் திட்டங்களை தற்போது தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

அதுகுறித்து நாம் ஆராயப் போவதில்லை. அதற்கான உரிமையும் எமக்கு இல்லை.

அத்துடன், தேர்தல்கள் ஆணைக்குழு அதன் கடமைகளை, உண்மையுடனும், நேர்மையுடனும் செய்யும் என கண்காணிப்பு அமைப்பு என்ற வகையில் நாம் நம்புகின்றோம்.

தற்போது மக்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. இதனை சில கட்சிகளை தமக்கு சாதகமாக பயன்படுத்தி வாக்கு வேட்டையில் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும்.

தேர்தல் காலத்தில் இவ்வாறான அபிவிருத்திகள் கட்சி சார்ந்து முன்னெடுக்கப்படுவதை கண்காணிப்பு அமைப்புகள் கவனத்தில் எடுக்கவேண்டும்" என மகிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# பொசன் தினத்தை முன்னிட்டு கைதிகள் விடுதலை

(கொழும்பு)

பொசன் போயா தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கப்பட்ட விசேட பொது மன்னிப்பின் கீழ் நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் இருந்து 289 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, இலங்கையின் அரசியலமைப்பின் 34 ஆவது சரத்தின் பிரகாரம், சிறு குற்றங்களுக்காகத் தண்டனை அனுபவித்து வரும் 263 ஆண் கைதிகளுக்கும், 6 பெண் கைதிகளுக்கும் இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்பட்டதாகச் சிறைச்சாலைகள் பேச்சாளர் காமினி பீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.


மன்னிக்கப்பட்ட கைதிகளில் 19 பேர் வெலிக்கடை சிறைச்சாலையிலும், 30 பேர் மஹர சிறைச்சாலையிலும், 30 பேர் வாரியபொல சிறைச்சாலையிலும், 28 கைதிகள் களுத்துறை சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-6)

# இலவச நீரிழிவு பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீரிழிவு கழகத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 3 மணிவரை யாழ். இ.போ.ச. மத்திய பஸ் நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

நீரிழிவு, இரத்த அழுத்த பரிசோதனைகள், உடல் திணிவு சுட்டி கணித்தறித்தல் என்பவற்றுடன் நீரிழிவு நோயாளர்களுக்கு நீரழிவுக் கைநூலும் வழங்கப்படும். (நி-6)



ஜெயபுரம் குடும்ப நல உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தாய்மார் கழகங்களின் ஏற்பாட்டில் ஜெயபுரம் கதிர் முன்பள்ளியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை போசாக்கு தொடர்பான கண்காட்சி நிகழ்வு இடம்பெற்றது. (படம்-சுபேசன்)



தென்மராட்சி மண்டுவில்- ராஜ ராஜேஸ்வரி அம்மன் (சோலை அம்மன் ஆலயம்) ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போது தூக்குக் காவடி, காவடி, பாற் குடம் மற்றும் கற்பூரச் சட்டி எடுத்து பக்தர் கள் நேர்த்திக்கடன் செய்திருந்தனர். (படம்-சுபேசன்)

# பொசன் தினத்தில் 19 மதுபான போத்தல்கள் மீட்பு ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகரில் பொலிஸார் நடத்திய விசேட சுற்றிவளைப்பு சோதனையின்போது ஐவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ். பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த கைது நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது. பொசன் தினத்தில் அரச மதுபானங்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவரும் ஹெரோயினை போதைப் பொருளுடன் இருவரும், கஞ்சா கலந்த மாவாவுடன் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 19 சாராய கால் போத்தல்கள், 70 மில்லிகிராம் ஹெரோயின், 80 கிராம் கஞ்சா கலந்த மாவா என்பன கைப்பற்றப்பட்டது. (நி-6)


**வலி கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் - கோப்பாய் (வரையறுக்கப்பட்டது)**

வருடாந்த பொதுச் சபைக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் 2024.06.29

இடம்:-
வலி கிழக்கு கால்நடை வைத்திய அதிகாரி அலுவலக மண்டபம்-கோப்பாய்

காலம்:-
2024.06.29 சனிக்கிழமை

நேரம்:-
முற்பகல் 10.00 மணி

தலைமை:-
திரு.ந.தர்மராசா (சங்கத் தலைவர்)

மேற்படி சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்கத் தகைமையுடைய சகல உறுப்பினர்களும் (இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்று) மேற்படி கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(289)

செயலாளர்.



**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 35 3/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: படவரைஞர். தொழில்நுட்ப உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த தொழில் புரியும் மணமகள்<br>தொ.இ: B/8917 | பிறப்பு-1991 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா:14 1/2<br>உயரம்: 5'3"<br>1 இல் செவ்வாய்<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:அரச தொழில்<br>தொ.இ: G/7314 |
| பிறப்பு:1982 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>உயரம்:5'9" 12 இல் செவ்வாய்<br>தகைமை/தொழில்: தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/11469 | பிறப்பு-1984 இந்து<br>நட்சத்திரம்-பரணி<br>செவ் 8 இல்<br>கி.பா: 67 1/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/2231 |
| பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா:19 1/2<br>உயரம்:5'6"<br>சூரி செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: BA Assistant Manager<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/14428 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>சூரிசெவ் 10 இல்<br>கி.பா:18<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: Bsc , Software Engineer<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி உத்தியோகம்<br>தொ.இ: G/11971 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் வான்தாக்குதலில் 10 பாலஸ்தீன உத்தியோகத்தர்கள் பலி

(ஜெருசலேம்)

வணிக பொருட்களை பாதுகாத்து வந்த பாதுகாப்புப் படை வீரர்கள் மீதுஇஸ்ரேல் வான் தாக்குதல் நடத்தியதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் உடல்கள் மற்றும் காயம் அடைந்தோர் ஐரோப்பிய காசா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக மருத்துவ மனைதரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த தாக்குதல் தொடர்பாக இஸ்ரேல் ராணுவம் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்க வில்லை.




சமீபத்தில் மேற்கு கரையில் இருந்து காசா முனைக்கு வணிக பொருட்கள் கொண்டு செல்ல இஸ்ரேல் அதிகாரிகள் அனுமதி அளித்திருந்திருந்தனர். இதனால் பாதுகாப்புப் படை வீரர்கள் பாதுகாப்புடன் வணிக பொருட்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள காசா முனைக்கு எடுத்துச் செல்லப் பட்டது.

கடந்த திங்கட்கிழமை இது போன்று வணிக பொரு ட்கள் கொண்டு சென்றபோது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர். இந்த நிலையில்2 ஆவது முறையாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (நி-6)

# இன்னும் 5 ஆண்டுகள் பாராளுமன்றத்தில் இருப்பேன்

## ரிஷி சுனக் உறுதி



(லண்டன்)

வரவிருக்கும் பொதுத் தேர்தலின் முடிவைப் பொருட்படுத்தாமல், தனது பாராளுமன்ற வாழ்க்கையை இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர இருப்பதாக பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக் கடந்த புதன் கிழமை உறுதியளித்துள்ளார்.

சுனக் எல்பிசியின் நிக் ஃபெராரியில் தோன்றியபோது வெளியிடப்பட்ட அறிக்கையில், ரிச்மண்ட் தொகுதிகளுக்கு சேவை செய்தது தொடர்பில் தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினார்.

"முதலில் நான் வெற்றி பெற வேண்டும். அது ரிச்மண்டில் உள்ள எனது தொகுதியினரைப் பொறுத்தது. மற்றொரு பாராளுமன்றத்திற்கு அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்த எனக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். நான் அந்த வேலையைச் செய்ய விரும்புகிறேன். நிச்சயமாக நான் அதைச் செய்வேன்," என்று அவர் தெரிவித்தார்.

கட்சி அறிக்கைகளின் நிதி நம்பகத்தன்மை குறித்து வாக்காளர்களிடையே அதிகரித்து வரும் சந்தேகங்களுக்கு மத்தியில் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

சமீபத்திய கருத்துக் கணிப்புகள் லண்டனில் கன்சர்வேடிவ் ஆதரவில் கணிசமான சரிவைக் காட்டுவதால், தேர்தல் பிரச்சாரம் சுனக்கிற்கு கொந்தளிப்பாக உள்ளது. அக் கட்சியின் இடங்கள் 20 இல் இருந்து 4 ஆகக் குறையும் என்று ஒரு புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

இருப்பினும், ஏப்ரலில் 2.3% ஆக இருந்து மே மாதத்தில் 2% ஆகக் குறைந்துள்ள சமீபத்திய பணவீக்க புள்ளிவிவரங்களிலிருந்து சுனக் ஒரு நம்பிக்கையைப் பெற்றுள்ளார். (நி-6)

# ரஷ்ய மென்பொருள் நிறுவனத்திற்கு அதிரடி தடை விதித்த அமெரிக்கா

(மொஸ்கோ)

ரஷ்யாவைச் சேர்ந்த சைபர் செக்யூரிட்டி நிறுவனம் கேஸ்பர்ஸ்கை இன் மென்பொருள்களுக்கு அமெரிக்காவில் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

கேஸ்பர்ஸ்கை தனது மென்பொருள்களை இனி அமெரிக்காவில் விற்பனை செய்யவோ அல்லது ஏற்கனவே விற்பனை செய்த மென்பொருள்களுக்கு அப்டேட் வழங்கவோ முடியாது. என்று அமெரிக்க வர்த்தகத்துறை தெரிவித்துள்ளது.

இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பது இதுவே முதல் முறை ஆகும்.

"ரஷ்ய நிறுவனமான கேஸ்பர்ஸ்கை கொண்டு அமெரிக்காவின் மிக முக்கிய விவரங்களை சேகரிக்கும் பணிகளில் ரஷ்யா தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது. மேலும், அந்நாடு அதற்கான திறன் கொண்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் அந் நாட்டு குடிமக்களுக்கு அவர்களது தொழில்நுட்பம் ஆபத்தை ஏற்படுத்தும் எனில் அதற்கு எதிராக நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்," என அமெரிக்க வர்த்தகத்துறை செயலாளர் ஜினா ரைமொண்டோ தெரிவித்துள்ளார்.

மென்பொருள் துறையில் பிரபலமாக அறியப்படும் கேஸ்பர்ஸ்கை நிறுவனம் ரஷ்யாவின் மொஸ்கோவை தலை மையகமாக கொண்டு இயங்கி வருகிறது. இந் நிறுவனம் உல கம் முழுக்க 31 நாடுகளில் செயற்பட்டு வருகிறது.

உலகம் முழுக்க 400 மில் லியன் பேரும், 200 இற்கும் அதிக நாடுகளில் 2.7 லட்சம் கார்ப்பரேட் நிறுவனங்களை வாடிக்கையாளர்களாகக் கொண் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# பங்சன் நாய்களை பரிசாக வழங்கிய கிம்



(பியாங்யாங்)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு வடகொரியாவின ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஒரு சோடி பங்சன் நாய்களை பரிசாக வழங்கியுள்ளார்.

பியாங்யாங்கில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, இரு தலைவர்களும் பல்வேறு பரிசுகளைப் பரிமாறிக் கொண்டுள்ளனர்.

விளாடிமிர் புடின் 2000 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக வட கொரியாவுக்குச் சென்றுள்ள நிலையில் அவரை கிம் ஜாங் உன் பிரமாண்டமாக வரவேற்றுள்ளார்.

இதன்போது, வட கொரியாவின் பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்துள்ளனர்.

இந்த நிலையில், புடினுக்கு பங்சன் நாய்கள் பரிசாக வழங்கப்பட்டுள்ளன.

கொரிய தீபகற்பத்தின் வடக்கே உள்ள மலைப்பகுதிகளில் பங்சன் இன நாய்கள் வாழ்கின்றன. அவை உறைபனி எதிர்ப்பு தோல் கொண்டவை.

அவைகளால் பாரிய விலங்குகளைக் கூட தாக்க முடியும். கொரியாவில் அவை வேட்டை நாய்களாக பயன்டுத்தப்படுகின்றன. (நி-6)

# நேருக்கு நேர் மோதிய ர இருவர் உயிரிழப்பு,9 பேர் ப


## சிலியில் துயரம்

(சாண்டியாகோ)

தென் அமெரிக்க நாடான சிலியின் தலைநகர் சாண்டியாகோவில் இருந்து பயணிகள் புதிய ரயில் ஒன்று புறப்பட்டது. வேக சோதனைக்காக இயக்கப்பட்ட இந்த ரயிலில் 10 ஊழியர்கள் பயணித்தனர்.

அதேசமயம் 1,500 தொன் தாமிர பொருட்களை ஏற்றிக் கொண்டு ஒரு சரக்கு ரயிலும் அந்த வழித் தடத்தில் சென்று கொண்டிருந்தது. புறநகர் பகுதியான சான் பேர்னார்டோ அருகே சென்றபோது அந்த இரு ரயில்களும் நேருக்குநேர் மோதின.

இதில் பயணிகள் ரெயிலின் சில பெட்டிகள் தடம் புரண்டன. மேலும் நேருக்குநேர் மோதியதில் பயணிகள் ரயிலின் ஒரு பெட்டி சரக்கு ரயிலின் மீது ஏறியது. இந்த விபத்தில் 2 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். 4 சீனர்கள் உட்பட 9 பேருக்கு படுகாயம் ஏற்பட்டது.



இதனையடுத்து மீட்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அவர்கள் அங்கு சென்று ரெயிலின் பெட்டிகளை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

மற்றொருபுறம் ரயில் பெட்டிகளுக்குள் சிக்கிய வர்களை மீட்கும் பணியும் துரிதமாக நடைபெற்றது. அதன்படி படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஹஜ் உயிரிழப்பு ஆயிரத்தை தாண்டியது!

(ஜெத்தா)

**சவூதி அரேபியாவில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக, ஹஜ் பயணம் மேற்கொண்டிருந்த ஹஜ் யாத்திரிகர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.**



அதன்படி, இவ்வாண்டு ஹஜ் பயணத்தின்போது சுமார் 10 நாடுகளைச் சேர்ந்த 1,081 பேர் கடும் வெப்பம் காரணமாக உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இஸ்லாமிய மக்கள் தங்கள் வாழ்வியல் கடமைகளில் முக்கியமானதாகக் கருதப்படும் புனித ஹஜ் யாத்திரைக்காக, ஒவ்வொரு ஆண்டும், சவூதி அரேபியாவிலுள்ள மக்கா புனித தளத்துக்கு செல்வது வழக்கமாகும்.

அதன்படி, இவ்வருடத்துக்கான ஹஜ் புனித யாத்திரை கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமானது.

அன்றிலிருந்து இதுவரை 20 இலட்த்துக்கும் மேற்பட்டோர் புனித யாத்திரைக்காக மக்கா நகரில் திரண்டுள்ளதாக குறிப்பிடப் படுகின்றது.

இந்நிலையில், சவூதி அரேபியாவில் நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக 1000 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ள நிலை யில், மேலும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

மேலும், மக்கா நகரில் இவ்வாரம் 51.8 டிகிரி வரை வெப்பம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறந்தவர்களின் உடல் கள், மக்காவுக்கு அருகில் உள்ள அல் - மொயிசம் மருத்துவமனையில் வைக்கப்பட்டு, அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது.

ஹஜ் புனித யாத்திரைக்கு முறைப்படி விசா எடுத்து வரும் மக்களுக்கு குளிர்சாதன வசதி உட்பட வேண்டிய வசதிகளை சவுதி அரசு செய்கிறது.

அவ்வாறு பதிவு செய்யாத மக்கள் நீண்ட நேரம் வெயிலில் இருக்கும் காரணத்தாலும், உணவு, நீர், குளிர்சாதன வசதி மற்றும் முறையான தங்கும் வசதி இல்லாததாலும் அதிகம் பேர் பலியான தாகக்கூறப்படுகிறது.(நி-6)

## காசா போரில் இதுவரை 37,431 பேர் உயிரிழப்பு

(ஜெருசலேம்)

காசாவில் இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலில், நேற்றைய நிலவரப்படி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37,431 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் இஸ்ரேல் தாக்குதலில் 35 பேர் உயிரிழந்ததாகவும், 130 பேர் காயமடைந்ததாகவும் காசா சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்தது.

இத்துடன், அந்தப் பகுதியில் இஸ்ரேல் கடந்த 8 மாதங்களுக்கும் மேல் நடத்திவரும் குண்டுவீச்சில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 85,653 ஆக அதிகரித்துள்ளது.

இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் அதிகாரபூர்வ எண்ணிக்கை 1,139 என அறிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)



## வியட்நாம் சென்றுள்ள ரஷ்ய ஜனாதிபதி புடின்

(வியட்நாம்)

உக்ரைன் போர் காரணமாக சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தப்படுவதைத் தவிர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அந்த முயற்சியின் ஒரு பகுதியாக வடகொரியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதனை தொடர்ந்து தற்போது வியட்நாமிற்கு சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

வியாட்நாமில் அந்த நாட்டு ஜனாதிபதியிடம் பேச்சுவார்த்தை நடத்திய புடின், ஆசிய-பசுபிக் பிராந்தியத்துக்காக நம்பகத்தன்மை வாய்ந்த பாதுகாப்புக் கட்டமைப்பு உருவாக்குவதன் முக்கியத்துவத்தை அவருடன் பகிர்ந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்தியத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காணும் வகையில் அந்தக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று இருதரப்பும் விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

அந்தப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இரு தரப்பு உறவை பலப்படுத்துவதற்கான பல்வேறு ஒப்பந்தங்களில் விளாடிமிர் புடின் கையொப்பமிட்டுள்ளார்.

முன்னதாக, வடகொரிய ஜனாதிபதி கிம் உடன் பேச்சுவார்த்தை நடத்திய புடின் உலக நாடுகளில் மேற்கத்தேய நாடுகள் மட்டுமே ஆதிக்கம் செலுத்துவதைத் தடுத்து, பன்முகத்தன்மை நிலவச் செய்ய தங்களது கூட்டணி உதவும் என்று தெரிவித்திருந்தார். இந்தச் சூழலில், வியட்நாமுடனான உறவை பலப்படுத்துவதற்கான ஒப்பந்தத்திலும் புடின் தற்போது கையொப்பமிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ...ரயில்கள் ... படுகாயம்




சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவத்தால் அங்கு பல மணி நேரம் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.(நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருண்ட காலத்தை மறந்துவிடக் கூடாது

## ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

மருந்து, எரிபொருள், உரம் வழங்க முடியாமல் தவித்த கடந்த காலத்தை யாரும் மறந்துவிடக் கூடாது என ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

பொரலஸ்கமுவ ஹோட்டலில் நடை பெற்ற அகில இலங்கை தனியார் மருந் தக உரிமை யாளர்கள் சங்கத்தின் 9 ஆவது மா நாட்டில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்த சந்ததியினருக்கு இவ்வாறான இருண்ட அனுபவத் திற்கு இடம ளிக்காமல் புதிய பொருளாதார மாற் றத்தின் ஊடாக இலங்கையை கட்டி யெ ழுப்பு வதற்கான அரசாங்கத்தின் திட்டத் தில் அனைவரும் இணைந்து கொள்ள வேண் டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் இதில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப் பினர் ராஜித சேனா ரத்ன கருத்து தெரிவிக்கையில்,

அனைத்து இலங்கை தனியார் மருந் தக உரிமையாளர்கள் சங்கம் கடந்த இக்கட்டான காலப் பகுதியில் இலாபத்தைப் பொருட் படுத்தாமல் சேவையை வழங் கியது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இன்று அதையே செய்கின்றார் என தெரிவித்தார், மேலும் இவ்வளவு குறுகிய காலத்தில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க முடியும் என்று நாமும் நினைக்கவில்லை எனவும்குறிப்பிட்டார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 400 | 250-600 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 185 | 220 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 350 | 120-150 | 180 |
| தக்காளி | 800 | 750 | 650 | 600 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 150 | 140 | 120-140 | 160 |
| கோவா | 300 | 350 | 350 | 250 | 300 |
| கரட் | 450 | 480 | 600 | 400 | 450 |
| பூசணி | 180 | 180 | 170 | 150 | 170 |
| புடோல் | 250 | 300 | 300 | 170 | 280 |
| வாழைக்காய் | 180 | 150 | 150 | 120-150 | 180 |
| சின்ன வெங்காயம் | 450 | 450 | 300 | 300-550 | 320 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 240 | 240 | 260 |
| பாகற்காய் | 1200 | 800 | 1200 | 700 | 1300 |
| வெண்டக்காய் | 200 | 300 | 200 | 250 | 250 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 120 | 150 | 120 |
| பயற்றங்காய் | 450 | 400 | 350 | 300-550 | 350 |
| லீக்ஸ் | 450 | 650 | 700 | 600 | 700 |
| பீற்றூட் | 800 | 550 | 700 | 450 | 700 |
| கறிமிளகாய் | 600 | 700 | 400 | 500 | 650 |
| முருங்கைக்காய் | 1200 | 1400 | 800 | 500-1050 | 1200 |
| போஞ்சி | 650 | 800 | 850 | 450 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 120 | 120-150 | 60 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 1000 | 800-1100 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 60-130 | 90-110 |
| இராசவள்ளி | 350 | 500 | 500 | 300 | 450 |
| வெங்காயப்பூ | 500 | 450 | 600 | -- | 430 |
| முள்ளங்கி | 160 | 200 | 250 | 350 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 150 | 100 | 50 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 100 | 50 |
| ஈரப்பலா | 160 | 160 | 120 | 80 | 200 |

# இன்று ஒரு தகவல் 160



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## முக்தீ

ஒரு துறவி இருந்தார். நிறையப்பேர் அவரிடம் உபதேசம் கேட்பது வழக்கம். வருபவர்கள் எல்லோருக்கும் அறிவுரை, ஆறுதல் கூறுவார். அப்படிப்பட்ட அந்தத் துறவியிடம் அறிவுரை கேட்பதற்காக ஒருநாள் ஒரு ஆசாமி வந்தான். வந்த ஆசாமி எப்படித் தெரியுமா? வடிகட்டிய கஞ்சன். மற்றவர்களுக்கு எதையும் கொடுத்துப் பழக்கப்படாதவன். அப்படி இருந்தும் அவனுக்கு ஒரு ஆசை. என்ன தெரியுமா? முக்தி கிடைக்க வேண்டுமாம். அதற்கு என்ன வழி என்று தெரிந்து கொள்வதற்காகத் தான் துறவியைத் தேடி வந்தான்.

வந்து அவர் முன் நின்று, "சுவாமி! நான் முக்தி அடைவதற்கு என்ன வழி என்று சொல்லுங்கள்" என்றான். துறவி பொறுமையாகப் பதில் கூறினார். "இதோ பாருப்பா! நீ முக்தி அடைய வேண்டும் என்றால் மகான்களும் சாஸ்திரங்களும் காட்டிய தார்மிக நெறிகளை பின்பற்ற வேண்டும். ஏழை எளியவர்கள், யாருமில்லாதவர்கள் இவர்களுக்கு எல்லாம் உதவி செய்ய வேண்டும்" என்றார்.

அவன் யோசித்துப் பார்த்தான். "இந்தத் துறவி கூறுவது போல் நடந்தால் தான் நமக்கு முக்தி கிடைக்கும் போல் தெரிகிறது. ஆனால் அதற்கு மிகவும் செலவாகும் போல் தெரிகிறதே. செலவு செய்தால் என்னிடம் இருக்கின்ற செல்வம் எல்லாம் கரைந்து போய்விடும். என்ன செய்வது? சரி இவர் கூறிய உபதேசத்தை எடுத்துக் கொள்ள முடியவில்லை என்றாலும் குறைந்தபட்சம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பின்பற்றுவோம். அந்த அளவுக்கு முக்தி கிடைத்தால் போதும்!" என்று முடிவு செய்தான்.

அதன்படி நடக்க ஆரம்பித்தான். தினமும் என்ன செய்வான் என்றால் தன் கையால் ஒரு பிடி அரிசி கணக்காக எடுத்துக் கொள்வான். அதை யாருக்காவது தானமாக கொடுப்பான். அவ்வளவு தான். இப்படியே செய்து கொண்டு வந்தான். சிறிது நாட்கள் கழித்து மறுபடியும் அந்தத் துறவியை பார்த்துவிட்டு வரலாம் என்று புறப்பட்டான். போய்ப் பார்த்தான்.

என்னப்பா நான் கூறியது போல் தானம் செய்கிறாயா? என்று துறவி கேட்டார். ஆம் சுவாமி! தினமும் தவறாமல் ஒரு கை பிடி அரிசியை தானம் செய்து கொண்டு வருகிறேன் என்று பெருமையாகக் கூறினான். துறவி இதைக் கேட்டுவிட்டு பாராட்டப் போகிறார் என்று எதிர்பார்த்தான். ஆனால் துறவி அப்படி செய்யவில்லை. ஒன்றும் போசாமல் மௌனமாக இருந்தார்.

அந்தச் சமயத்தில் அவர் ஒரு மரத்திற்கு அடியில் உட்கார்ந்திருந்தார். அந்த மரத்தினுடைய அடிப்பாகத்திலே தன்னுடைய விரல் நகத்தினால் கீற ஆரம்பித்தார். இந்த ஆள், "என்ன இது துறவி வாயைத் திறக்கவில்லையே" என்று நின்று பார்த்துக் கொண்டே இருந்தான். "என்ன சுவாமி நான் என்னுடைய தானத்தைப் பற்றி சொன்னேன் நீங்கள் அதைப் பற்றி எதுவும் சொல்லாமல் மரத்தைக் கீறிக்கொண்டிருக்கிறீர்களே!" என்றான்.

"ஒன்றும் இல்லையப்பா நான் நகத்தால் இந்த மரத்தை வெட்டிக் கொண்டிருக்கின்றேன் நீ சிறிது நேரம் சும்மா இரு" என்றார்.

இவனுக்கு அதைக் கேட்டதும் சிரிப்பு வந்துவிட்டது. "என்ன இது? கை நகத்தினால் அவ்வளவு பெரிய மரத்தை வெட்ட முடியுமா? கோடாலியால் செய்ய வேண்டிய ஒரு காரியத்தை உங்களால் எப்படி நகத்தால் செய்ய முடியும்?" என்றான்.

"ஒரு பிடி அரிசியை கொடுத்து விட்டு நீ மோட்சத்திற்கு போக வேண்டும் என்று நினைக்கும் போது நான் என்னுடைய விரல் நகத்தால் இவ்வளவு பெரிய மரத்தை வெட்ட முடியும் என்று நினைக்கக் கூடாதா?" என்றார் துறவி. துறவி இப்படிச் சொன்ன பிறகு தான் அந்த ஆளுக்கு தான் செய்த தவறு புரிந்ததாம். அதற்கு பின்தான் ஒரு தெளிவு உண்டாகியதாம்.

முக்தி அடைவது என்ன சாதாரண விடயமா? முக்தி ஸ்தலங்கள் சிலது சொல்லுவார்கள் தெரியுமா? திருவாரூரில் பிறந்தால் முக்தி, சிதம்பரத்தை தரிசித்தால் முக்தி, திருவண்ணாமலையை நினைத்தாலே முக்தி, காசியில் இறந்தால் முக்தி என்று சொல்லுவார்கள். அந்த இடங்களினுடைய மகிமையை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அப்படிச் சொல்லுவார்கள்.

மேல்லோகத்தில், முக்தி அடைந்த ஐந்து பேர் சந்தித்துக் கொண்டார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கேட்டார்கள்;

"நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்" என்று ஒருவர் கேட்டார்.

அதற்கு இன்னொருவர், "நான் திருவாரூரில் பிறந்தேன்" என்றார்.

இன்னொருவர், "நான் சிதம்பரத்தை தரிசனம் செய்தேன்" என்றார்.

அடுத்தவர், "நான் திருவண்ணாமலையை நினைத்தேன்" என்றார்.

நான்காவது ஆள், "நான் காசியில் இறந்தேன்" என்றார்.

ஐந்தாவது ஆள் பேசாமல் நின்று கொண்டிருந்தார்.

"என்ன பேசாமல் நிற்கிறீர்கள் உங்களுக்கு எப்படி முக்தி கிடைத்தது" என்று சொல்லுங்கள் என்று மற்ற நான்கு போரும் கேட்டார்கள். இவர் மெதுவாக வாயைத் திறந்து, "நான் மெயின் ரோட்டை கிராஸ் செய்தேன்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடைக்கு தயாரான வயல் நிலங்கள் பாதிப்பு

## விவசாயிகள் கவலை

(அக்கராயன்)

கிளிநொச்சி குடமுருட்டிக் குளம் திறந்து விடப்பட்டிருப்பதன் காரணமாக அறுவடைக்கு தயாரான வயல் நிலங்களில் நீர் நிறைந்து பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சிறு போக நெற்செய்கைக் கூட்டம் இடம்பெற்று சிறு போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு குடமுருட்டிக் குளத்தின் கீழ் 300 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் குளத்தின் நீர் திறந்து விடப்பட்டதன் காரணமாக அறுவடைக்கு தயாரான வயல் நிலங்களில் குளத்தின் நீர் நிறைந்து காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (நி-6-350)

# சோதனைச் சாவடி மன்னாரில் அகற்றம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நீண்ட காலமாக மக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கிய பிரதான சோதனைச் சாவடி மற்றும் வீதி தடைகள் அகற்றப்பட்டுள்ளதுடன் சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளது

பலவருடங்களாக குறித்த சோதனைச் சாவடியை அகற்றுமாறும் குறித்த சோதனைச் சாவடியினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்கள்,சிவில் செயற்பாட்டாளர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் போராட்டங்களை முன்னெடுத்ததுடன், சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்குச் சோதனைச் சாவடியை அகற்றுவதற்கான கோரிக்கையை கடிதங்களாகவும் மகஜர்களாகவும் வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையில் இடம் பெற்ற விசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் ஜனாதிபதியிடம் குறித்த சோதனைச் சாவடியை அகற்றி தருமாறு நேரடி கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக நேற்று குறித்த பாலப் பகுதியில் காணப்பட்ட வீதித் தடைகள் அகற்றப்பட்டுள்ளதுடன் சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் அப்பகுதியில் இராணுவம் தொடர்ச்சியாக நிலை கொண்டுள்ளதுடன் இராணுவ கட்டுமாணங்கள் எவையும் அகற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6-285)

# ஜனாதிபதியை சந்திப்பதற்கான முயற்சிகள் பயனளிக்கவில்லை

(மன்னார்)

இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை நீண்ட புரையோடிப்போன ஒரு விடயமாக உள்ளது. கடந்த வாரம் மன்னாருக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் பயனளிக்கவில்லை. என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் விஜயம் எதற்கானது என்று கூட தெரியவில்லை. வடக்கில் உள்ள பல்வேறு வளங்களை எவ்வாறு அந்நியர்களிடம் கையளித்து எவ்வாறு இந்த நாட்டிற்கான வருவாயைப் பெற்றுக் கொள் ளலாம் என்பதே காரணமாக உள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரிற்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்ட போது அவரைச் சந்திப்பதற்கான எமது கோரிக்கை தட்டி கழிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (நி-6).







வவுனியாவில் பாடசாலை நேரத்தில் போக்குவரத்து கண்காணிப்பு கடமையில் ஈடுபடும் மாணவர்களுக்கு உலுக்குளம் பொலிஸாரால் விசேட பயிற்சி வழங்கும் நிகழ்வு அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியில் அமைந்துள்ள அல் இக்பால் மகாவித்தியாலய மாணவர்களுக்கே குறித்த பயிற்சி திட்டம் பொலிஸாரால் வழங்கி வைக்கப்பட்டது. (படம்- வசந்தரூபன்)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3149

### விதுஷன்




### சர்மிலா




### துஷாந்தினி




### தர்ஷன்




### கபி




### தண்விகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 514





வேறு ஏதாவது சொல்லுங்கள்! கடல்களுக்கப்பால் உள்ள பவளத் தீவிலிருந்து விலை மதிக்க முடியாத பவளங்களைக் கொண்டுவரச் சொல்லுங்கள்.

ஆழ்கடலின் அடியிலிருந்து முத்துக்களைக் கொண்டு வரச் சொல்லுங்கள். மேருமலையின் உச்சிச் சிகரத்திலே ஏறிச் சஞ்சீவி மூலிகையைக் கொண்டு வரச் சொல்லுங்கள். மேக மண்டலத்துக்கு மேலே பறந்து நட்சத்திரங்களைப் பறித்துக் கொண்டு வந்து ஆரம் தொடுத்துத் தங்கள் கழுத்தில் போடச் சொல்லுங்கள். பூரணச் சந்திரனைக் கொண்டு வந்து தங்களுடைய முகம் பார்க்கும் கண்ணாடியாக்கித் தரும்படி சொல்லுங்கள்!"

போதும், ஐயா, போதும்! என்னை ஏற்கனவே அந்தப் பழையாறைப் பிராட்டி 'பைத்தியம்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறாள். உண்மையாகவே எனக்குப் பைத்தியம் பிடிக்கச் செய்து விடாதீர்கள்! என்றாள் நந்தினி.

பார்த்திபேந்திரன் சிறிது வெட்கம் அடைந்தான். பைத்தியம் பிடித்தி ருப்பது எனக்குத்தான் மன்னியுங்கள். தங்களுடைய விருப்பத்தை முதலில் தெரிவியுங்கள்! என்றான்.

"சோழ நாடெங்கும் தமிழகமெங்கும் எனக்கு ஏற்பட்டிருக்கும் கெட்ட பெயரைப் போக்கிக் கொள்ள விரும்புகிறேன். அதற்குத்தான் தங்கள் உதவியை நாடுகிறேன். நான் இந்தக் கிழவரை மணந்ததின் காரணமாகச் சோழ குலத்துக்கே கேடு வந்து விட்டதென்று ஜனங்கள் பேசிக் கொள்கிறார்களாம். மதுராந்தகத்தேவரை இராஜ்ய ஆசை கொள்ளச் செய்தது நான்தான் என்று சொல்லுகிறார்களாம். சோழ நாட்டுச் சிற்றரசர்களை அவர் பக்கம் திருப்பியதும் நான்தான் என்றும் சொல்கிறார்களாம். இந்த அவப்பெயருடன் இறந்து போவதற்கு நான் விரும்பவில்லை.

இறந்து போவதைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள்? என்னைத் துன்புறுத்துவதற்காகவா?"

"பல்லவ குமாரா! தங்களுக்கு ரேகை சாஸ்திரம் தெரியுமா? ரேகை சாஸ்திரத்தில் தங்களுக்கு நம்பிக்கை உண்டா? என்று நந்தினி சம்பந்தமில்லாத ஒரு கேள்வியைக் கேட்டாள்.

பார்த்திபேந்திரன் அதற்கு நேர் மறுமொழி சொல்லாமல் "எங்கே? கையைக் காட்டுங்கள்!" என்றான்.

நந்தினி வலது கையை நீட்டினாள். அதைப் பார்த்திபேந்திரன் சிறிது நேரம் உற்றுப் பார்த்து விட்டு, "ஆச்சரியமான ரேகைகள்.

இம்மாதிரி காண்பதே அபூர்வம்! அந் தக் கையையும் சிறிது காட்டுங்கள்!" என்றார்.

நந்தினி இன்னொரு கையையும் நீட்டினாள். பல்லவன் அதையும் பார்த்துவிட்டு, "தேவி! இதற்கு முன் யாராவது தங்கள் கரங்களின் அதிசயமான ரேகைகளைப் பார்த்துவிட்டு ஏதாவது சொல்லியிருக்கிறார்களா? என்று கேட்டான்.


"ஆம்! பழையாறை இளைய பிராட்டி ஒரு தடவை என் கையைப் பார்த்துவிட்டுச் சொன்னாள். என்ன சொன்னாள்? நான் அற்ப ஆயுளில் சாவேன் என்று சொன்னாள். அது உண்மைதான்! என்றான் பார்த்திபேந்திரன்.ஐயா! நீங்களுமா அப்படிச் சொல்லுகிறீர்கள். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

(நேற்றைய தொடர்ச்சி)

## காலத்தின் மதிப்பு



அறிவை பயன்படுத்த நமக்கு நேரம் எது. பொறுமையாக இருக்க ஏது அவகாசம். சூரியனை பயன்படுத்த ஏது காலம்? அன்பு காட்டை ஏது வாய்ப்பு? எனவே உலகிலேயே மிகவும் மதிப்பு வாய்ந்த பொருள் காலம்தான்".

ஆகவே, அதனை வீணாக்காமல் நம்முடைய ஆக்க பணிகளுக்கு எந்தெந்த வகையில் எல்லாம் அதனை பயன்படுத்திக் கொள்ள முடியுமோ? அந்தந்த வகையில் எல்லாம் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்" என்றார்.

அரசர் அந்த ஆறாவது அறிஞர் கூறிய கருத்துதான் சிறந்தது என்று பாராட்டி அந்த கருத்தை ஏற்றுக் கொண்டார். காலத் தின் அருமையை குறித்து மிகவும் அழகாக விளக்கிய ஆறாவது அறிஞருக்கு அவர் மனம் விரும் பும் வகையில் எண்ணற்ற பரிசுகளை கொடுத்து பாராட்டினார்.

அது மட்டுமல்ல அவரை தனது அமைச்சராக நியமித்து கௌரவப்படுத்தினார். மற்ற ஐந்து அறிஞர்களும் அரசரின் செயலை பாராட்டினார்.

நீதி : காலம்தான் இவ்வுலகிலே விலை மதிக்க முடியாத பொருள்.

காலத்தை தவறவிட்டவர்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாது. எனவே இளமையிலே நன்கு கற்க வேண்டும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடத்தை உண்டாக்கிக்கொள்ளும். ~ எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை தமிழ் மக்கள் புறந்தள்ள வேண்டும்

தமிழ் மக்களுக்கு ஆன அரசியல் தலைமை இல்லை என்பது தெரிந்த விடயம்.

ஏதோ தேர்தல் காலங்களில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்குச் சென்றால் அதுபோதும் என்பதுதான் நம் தமிழ் அரசியல்வாதிகளின் நிலைப்பாடு.

பாராளுமன்றப் பிரதிநிதிகளாக நாம் அனுப்பி வைத்தவர்களால் ஏதேனும் சாதிக்க முடிந்ததா? என்றால் எதுவும் இல்லை என்பதுதான் முடிவு.

ஆக, பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தால் நம் தமிழ் மக்களுக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

இருந்தும் தமிழ் மக்களுக்கு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் வேண்டாம் என்று கூறுவதற்கு நம் அரசியல்வாதிகள் தயாரில்லை.

இங்குதான் எங்கள் தமிழ் அரசியல்வாதிகளின் சுயநலம் ஓங்கி உயர்ந்து நிற்கிறது.

நிறைந்த சம்பளம், வாகன அனுமதிப் பத்திரம், இதர கொடுப்பனவுகள், பிற சலுகைகள், பாராளுமன்ற சிற்றுண்டிச்சாலை வசதிகள் என்பன காரணமாக பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழப்பதற்கு நம் அரசியல் தரப்புகள் தயாரில்லை என்பதுதான் உண்மை.

ஆம், வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு ஒரு சிங்கள ஆளுநரை நியமித்தால் அதற்கு எதிர்ப்பு.

தமிழர் பிரதேசத்துக்கு ஒரு சிங்கள வைத்தியரை பணிப்பாளராக நியமித்தால் அதற்குச் சண்டை.

ஆனால் சிங்களப் பாராளுமன்றத்துக்கு நாம் செல்லாமல் பதவிகளைத் துறந்தால் என்ன? என்று கேட்டால், அது வெறுப்பையும் கோபத்தையும் ஏற்படுத்துகிறது.

எதுஎவ்வாறாயினும் தேர்தல் அரசியல் இருக்கும்வரை தமிழ் மக்களுக்கு ஆன அரசியல் தலைமை கிடைக்கமாட்டாது என்பதுதான் உண்மை.

எனவே தமிழ் மக்கள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் புறந்தள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக எவரும் பாராளுமன்றத்துக்குச் செல்வதில்லை என்று ஏகமனதான முடிவை எடுக்க வேண்டும்.

இதைச் செய்தாலன்றி, சுயநல அரசியலை எம் மத்தியில் இருந்து ஒருபோதும் வேரறுக்க முடியாது.

எனவே இதுபற்றி தமிழ்ப் புத்திஜீவிகளும் தமிழ்ப் பற்றாளர்களும் சிந்திக்க வேண்டும்.

இதைவிடுத்து பாராளுமன்றம் சென்று அங்கு ஆளில்லாக் கதிரைகளுக்கு உரையாற்றுகின்ற நடைமுறைக்கு நாம் தொடர்ந்தும் இடம்கொடுப்போமாயின், எங்கள் தலையில் நாங்களே மண்ணை அள்ளிக் கொட்டியவர்களாக ஆகிவிடுவோம்.

உண்மை. மேற்குறிப்பிட்டவாறு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை நாம் ஓரங்கட்டுவோமாயின், சிங்கள ஆட்சியாளர்களிடம் இருந்து நாம் பிரிந்து செல்ல விரும்புகின்றோம் என்ற செய்தி உலகுக்கு சொல்லப்படும்.

சுவடவே தேர்தல் அரசியல் இல்லாதபோது, உண்மையான தமிழ் இனப்பற்றாளர்கள் தமிழ் மக்களின் அரசியலை நேர்மையாக வழிநடத்திச் செல்வர்.

ஆகையால் இதுபற்றி தமிழ் மக்கள் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

## கடனைத் திருப்பிச் செலுத்த சீனாவுடன் கலந்துரையாடல்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற இரண்டாம் சுற்றுக் கலந்துரையாடலின் போது, கடனை திருப்பிச் செலுத்துவதற்கு கால அவகாசம் கிடைத்துள்ளதாகவும். எனவே இந்தப் பணியை நிறைவு செய்வது தொடர்பாக தற்போது சீனாவுடன் கலந்துரையாடி வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் வருடாந்த 9ஆவது மாநாட்டில் பிரதம அதிதியாக ஜனாதிபதி கலந்து கொண்டிருந்தார்.

இந்த மாநாடு பொரலஸ் கமுவ கோல்டன் ரோஸ் ஹோட்டலில் நேற்று நடைபெற்றிருந்தது.

கடந்த காலத்தில் கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியின் போது, நாட்டை விட்டு தப்பித்து ஓடாமல் அதனை எதிர்கொண்டு நாட்டுக்காக தமது பொறுப்புகளை நிறைவேற்றிய மருந்தக உரிமையாளர்கள் சங்கத்திற்கு ஜனாதிபதி வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார்.

அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தேஷமான்ய சந்திக கங்கந்தவுக்கும், சிறந்த மாவட்ட சங்கங்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது விருதுகளை வழங்கி வைத்தார்.

அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் பணிப்பாளர் சபையினால் ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது. (ம-7,10)

## குறுகிய காலத்தில் ரணில் நாட்டைக் காப்பாற்றியுள்ளார்

### ராஜித சேனாரத்ன

வங்குரோத்து அடைந்த நாடுகள் மத்தியில் மிக விரைவாக இயல்பு நிலைக்கு வந்த நாடு இலங்கை என்பதை உலகமே ஏற்றுக் கொண்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் 9ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

இவ்வளவு குறுகிய காலத்தில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க முடியும் என்று நாம் ஒருபோதும் நினைக்கவில்லை.

இதனை நாம் கண்கூடாகப் பார்த்துள்ளோம். நாட்டை முன்னேற்றப்பாதைக்கு ரணில் கொண்டு வந்துள்ளார் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

வங்குரோத்து அடைந்த நாடுகள் மத்தியில் மிக விரைவாக இயல்பு நிலைக்கு வந்த நாடு இலங்கை என்பதை உலகமே ஏற்றுக் கொள்கிறது. உலகமே பாராட்டுகிறது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீண்டிருப்பது பொருளாதார அதிசயம் என உலக நாடுகள் கூறுகின்றன.

வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை இவ்வளவு சீக்கிரம் மீட்டெடுத்த நாட்டை நாங்கள் பார்த்ததில்லை என்கிறார்கள். சர்வதேச நாணய நிதியம் ரணிலைப் பாராட்டுகின்றது.

ஆனால் நம் நாட்டு மக்கள் ரணில் விக்கிரமசிங்க மீது குற்றம் சாட்டுகிறார்கள்.

நாட்டின் தற்போதைய உண்மை நிலையை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (ம-7,10)

## மின்கம்பம் வீழ்ந்ததில் மின்சார சபை ஊழியர் பலி

(நுவரெலியா)

நுவரெலியா பிரதேசத்தில் ஹங்குரன்கெத்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மின் கம்பம் வீழ்ந்து மின்சார சபை ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹங்குரன்கெத்த பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

அம்பகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய மின்சார சபை ஊழியரொருவரே உயிரிழந்துள்ளார்.

மின்சார சபைக்குச் சொந்தமான லொறி ஒன்றில் ஏற்றிச் சென்ற மின் கம்பம் ஒன்றை லொறியிலிருந்து இறக்க முயன்றபோது மின் கம்பமானது மின்சார சபை ஊழியரின் மீது தவறி வீழ்ந்துள்ளது.

இதனையடுத்து, காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக ஹங்குரன்கெத்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் ஹங்குரன்கெத்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹங்குரன்கெத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

## ஆட்டோ மோதியதில் பெண் உயிரிழப்பு

பாதுக்கை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மீபே - இங்கிரிய வீதியில் அங்கம்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பாதுக்கை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

மீபேவிலிருந்து இங்கிரிய நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று வீதியில் பயணித்த வயோதிபப் பெண் மீது மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தின் போது வயோதிபப் பெண் காயமடைந்துள்ள நிலையில் ஹோமாகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

பாதுக்கை, அங்கம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 79 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் ஹோமாகமை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பாதுக்கை பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, முச்சக்கரவண்டியின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,10)

## புத்தளத்தில் இளம்பெண் நேற்று சடலமாக மீட்பு

(புத்தளம்)

புத்தளம் - மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமீரகம கிராம மையவாடிக்கு அருகில் உள்ள வீதியில் இளம் பெண்ணின் சடலமொன்று நேற்று காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சமீரகம பகுதியில் உள்ள தென்னந் தோட்டமொன்றில் வசித்து வந்த 26 வயதான பெண்ணொருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் குறிப்பிட்டனர்.

மதுரங்குளி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் வீட்டிலிருந்து வெளியேறிய குறித்த இளம் பெண், மீண்டும் வீடு திரும்பாததை அடுத்து, கணவர் தனது மனைவியை தேடியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே குறித்த பெண் இருந்த தோட்டத்திற்கு முன்னால் உள்ள வீதியில் காணப்பட்ட வெள்ள நீருக்குள் வீழ்ந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளம் பெண்ணுக்கு அடிக்கடி வலிப்பு நோய் ஏற்படுவதாக குடும்பத்தாரிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி - பகுதி V

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

21

அவர் வங்கி நோட்டுக்களை வாங்கிக்கொண்டு வெள்ளி நாணயங்களைக் கொடுக்கும்படி உத்தரவு பிறப்பித்தார்.

1886 இல் ஊவா மாகாணம் உருவாக்கப்பட்டது. வேளாண்மை செய்தற் பொருட்டும், தெருக்கள், பாலங்கள் அமைத்தற் பொருட்டும் ஏராளமான பணத்தைச் செலவிட்டார். நீர்ப்பாசன வேலைகளை விருத்தி செய்தார்.

கலாவெவ, யோதஎல வெட்டு வாய்க்கால் புதுப்பிக்கப்பட்டன. 1887 இல் விக்ரோறியா இராணியின் 50 ஆம் வருட யூபிலி மிக ஆடம்பரமாகக் கொண்டா டப்பட்டது. 1889 இல் சப்பிரகமுவா மாகாணம் உருவாக்கப்பட்டது. கண்டியருக்கு ஒருவரும் முகமதியருக்கு ஒருவருமாக இருவரைச் சட்ட சபைக்கு நியமித்தார்.

1885 இல் இலங்கைக்கென ஒரு பாதகவியல் சட்டத்தொகுப்பை ஏற்படுத்தினார்.

**சேர். ஆத்தர் ஹவ்லொக் (1890-96)**

சேர். ஆத்தர் ஹவ்லொக் (1890-96) 1892 இல் தானிய வரியை நீக்கினர். 1894 இல் புகையிரத வீதியை பண்டாரவளை, மாத்தறை, குருநாகல் எனுமிடங்களுக்கு விஸ்தரித்தார். 1895 இல் களனி கங்கையின் மேல் விக்ரோறியா பாலத்தைக் கட்டுவித்தார்.

**சேர். ஜோசப் வெஸ்ற் றிட்ஜ்வே (1896-1903)**

சேர். ஜோசப் வெஸ்ற் றிட்ஜ்வே (1896-1903) ஆசிரிய பயிற்சிக் கல்லூரியை ஆரம்பித்தார். 1897 இல் தரிசு நிலச் சட்டத்தை நிறைவேற்றினர். 1900 இல் களனிப் புகையிரத வீதியில் வேலை தொடங்கியது. அவ்வாண்டு யாழ்ப்பாணத்துக்குப் புகையிரத வீதி அமைக்கும் வேலையும் ஆரம்பமாயிற்று. இவ் வீதி 1902 மார்ச் 10 இல் அவரினால் திறக்கப்பட்டது.

1902 ஒகஸ்ட் ஒன்பதில் ஏழாம் எட்வேட், மன்னராகப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டார். அவ்வாண்டு இலங்கையில் முதல் மோட்டார் வாகனம் வந்திறங்கியது.

பொருளாதார விருத்தியும் நாட்டு முன்னேற்றமும் பதினெட்டாம் நூற்றண்டின் இறுதியில் இலங்கையை, பிரித்தானியர், அதன் கேந்திர நிலையத்தின் காரணமாகவே வெற்றி கொண்டனர். ஏடன், பம்பாய், சிங்கப்பூர் போன்று இலங்கையின் துறைமுகங்கள், நீண்ட பிரயாணம் செய்யும் கப்பல்களுக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுத் தரவும், கடல் மார்க்கங்களை மேற்பார்வை செய்யவும் உதவின. ஆனால், நாளடைவில் இத்தீவின் கேந்திர நிலையத்திலும் பார்க்கப் பொருளாதார நிலைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை அவர்கள் கண்டனர்.

பிரித்தானிய அரசாங்கமும் மக்களும், இந்நாட்டின் செல்வ வளம் அதன் நிலத்தில்தான் தங்கியிருப்பதை உணர்ந்தனர். தனியார் மூலதனம் தீவில் குவிந்தது. போர் வீரர்களினதும், நிர்வாகிகளினதும் அடிச்சுவட்டில் தோட்டத்துரைமாரும் வர்த்தகரும் தீவின் மேற் படையெடுத்தனர். கோப்பி, தேயிலை, இறப்பர் தொழில்களின் விருத்தியுடன் தீவின் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் நாளாந்தம் உயர்வு பெறலாயிற்று.

18 ஆம், 19 ஆம் நூற்றண்டுகளில் இங்கிலாந்தில் கைத்தொழிற் புரட்சி துரிதமாக முன்னேறி வந்தது. பிரிட்டனின் கைத்தொழிற் பொருள்களின் வர்த்தகத்தைப் பாதிக்கவல்ல கைத்தொழில்கள் இங்கு நிறுவப்படுவதைத் தடை செய்யும் வகையில் பிரித்தானிய அரசாங்கம் இத்தீவின் வெளிநாட்டு வர்த்தகம், வரவு செலவுத்திட்டம் முதலியவற்றை அமைத்தது.

அயனமண்டலங்களில் உற்பத்தி செய்யக்கூடிய கோப்பி, தேயிலை, இறப்பர் என்னும் பொருள்களைப் பெருந்தோட்ட முறையில் செய்யுமாறு ஆங்கிலேயரை ஊக்குவித்து, அத்தொழில்களில் முதலீடு செய்தோர்க்கு நிறைந்த உதவிகளும் அளிக்கப்படலாயின. மலைநாட்டின் தரையும், நடுத்தரமான சுவாத்தியமும், பிரித்தானிய முதலாளிகளை அங்கு வரவழைத்தன.

அங்கு உருவாகிய பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை வர்த்தகம், அந்நியரால் அந்நிய மூலதனத்தையும், அந்நிய தொழிலாளரையும் கொண்டு நடாத்தப்படலாயிற்று அவர்கள் நிலங்களை மலைநாட்டில் வாங்கியும், மூலதனத்தைப் பிரித்தானிய வங்கிகளிடம் கடன் பெற்றும், கூலியாட்களை இந்தியாவினின்று வரவழைத்தும், பெருந்தோட்டங்களை நிர்மாணித்தனர்.

இவ்விதமாக இலங்கையின் வியாபாரம், வர்த்தகம், தொழில் துறைகள் யாவற்றையும் ஐரோப்பியர் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். இம் முறையினை இக்காலச் சொல்லியலில் "பொருளாதாரச் சுரண்டல்" என்பர். இம்முறை "சுரண்டப்பட்டோருக்கு" தீமைகளை விளைவித்தது என்று பொதுவாகக் கூறப்படினும், அதன் அடிச்சுவட்டில் நன்மைகளும் விளைந்தன என்பதை நாம் மறக்கலாகாது.

ஆங்கிலேயரின் பொருளாதாரச் சுரண்டல், அவர்களுக்கு முன்சென்ற போர்த்துக்கேயரினதும், ஒல்லாந்தரினதும் முறைகளினின்று பெரிதும் வேறுபட்டுக் காணப்பட்டது. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கறுவா வியாபாரத்தின் மூலம் நிறைந்த பொருளீட்டுவதில் கண்ணுங்கருத்துமாயிருந்தார்களேயன்றி, இந்நாட்டில் எவ்விதமான முதலீடுகளையும் செய்தார்களில்லை.

மறுபுறம் ஆங்கிலேயர், தம் பணத்தை முதலீடு செய்து, நாட்டின் பொருளாதாரத்தைப் புது வழிகளில் விருத்திசெய்து அதன்வழியாகவே செல்வத்தை ஈட்டினர். அவர்கள், காடுகளாகவும் தரிசு நிலங்களாகவும் காட்சியளித்த இந்நாட்டு மண்ணைப் பொன் கொழிக்கும் பூமியாக மாற்றியமைத்தனர்.

போக்குவரத்து வசதிகளை விருத்தி செய்து நாட்டின் பொருளாதாரத்தையும், சமூக வாழ்வையும் வளம் பெறச் செய்தனர். அவர்களுடைய முயற்சியினால் அரசாங்க வருமானம் பன்மடங்கு அதிகரிக்கவே, நாடு பல துறைகளிலும் முன்னேற்றம் பெற்று நலமுடன் விளங்கியது. அரசாங்கமும் பொது நலனுக்காக வைத்திய, சுகாதார நிலையங்களையும், கல்விச் சாலைகளையும் அமைத்துக் கொடுக்கலாயிற்று. எனினும், நாட்டின் உழைப்பில் பெரும் பகுதி வெளியே அனுப்பப்பட்டது என்பதை மறக்கலாகாது. (முற்றும்)

# இலங்கை- இந்தியா கடல் எல்லையை ஆய்வு செய்த மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர்

(சென்னை)

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி அரிச்சல் முனையில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மத்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் சஞ்சீவ் சீத் இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லைப் பகுதியில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கை குறித்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச யோகா தினம் நேற்று இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடி அரிச்சல் முனைப் பகுதியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நேற்றுமுன் தினம் சிறிய ரக இராணுவ விமான மூலம் ஐ.என்.எஸ் பருந்து கடற்படைத்தளத்திற்கு வந்த மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் சஞ்சீவ் சீத் இந்திய கடற்படை மற்றும் கடலோர கடற்படை, காவல் படை முகாம்களை ஆய்வு செய்த பின்னர் இராமேஸ்வரம் கடல் பகுதியை ஆய்வு செய்ததுடன் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு பணிகள் குறித்து பாதுகாப்புத் துறை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இதையடுத்து நேற்றுக் காலை இராமேஸ்வரம் ராமநாதசாமி திருக்கோயில் சாமி தரிசனம் செய்த மத்திய இணை அமைச்சர் பின்னர் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையில் நடைபெற்ற யோகா தினத்தில் கலந்து கொண்டு யோகா பயிற்சி செய்தார்.

அதனைத் தொடர்ந்து தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியிலிருந்து இந்திய கடலோர காவற்படைக்கு சொந்தமான ஹோவர் கிராஃப்ட் கப்பலில் இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லை வரை சென்று கடலுக்கு மத்தியில் அமைந்துள்ள மணல் திட்டில் இறங்கினார்.

பின்னர் சர்வதேச கடல் எல்லையில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பாதுகாப்பு அதிகாரியிடம் கேட்டறிந்தார்.

இதனையடுத்து இந்திய எல்லையில் வைக்கப்பட்டிருந்த இந்தியா என்ற பெயர்ப் பலகைக்கு அருகே நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டதுடன் எல்லையில் உள்ள தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்தினார்.

பின்னர் மீண்டும் ஹோவர் கிராப்ட் ரோந்து கப்பல் மூலம் தனுஷ்கோடி வந்து சாலை மார்க்கமாக ஐ.என்.எஸ் பருந்து கடற்படைத்தளத்திற்கு சென்றார்.

முன்னதாக முன்னாள் குடியரசுத் தலைவர் ஏபிஜே அப்துல்கலாம் நினைவகத்திற்கு சென்று அவரது சமாதியில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

ஆய்வின் போது பாதுகாப்புத்துறை இணை அமைச்சருடன் இந்திய கடலோர காவற்படை மண்டபம் முகாமின் நிலைய கொமாண்டர் வினைக்குமார் மற்றும் கடற்படைத்தளத்தின் நிலையை கொமாண்டர் கேப்டன் அஸ்வின் மேனன் ஆகியோரும் உடன் இருந்தனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிட்டி...

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிரான தொடர் போராட்டம் நேற்றும் இடம்பெற்றது.

பொதுமக்களது காணிகள் அபகரிக்கப்பட்டு, உரிய அனுமதி பெறப்படாமலேயே இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, இவ்விகாரையை அகற்றுமாறுகோரி ஒரு வருட காலமாக தொடர் போராட்டம் இடம்பெற்று வருகிறது.

பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இந்த விகாரையில் வழிபாடுகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் அதற்கு எதிர்ப்பை வெளிக்காட்டும் விதமாக இந்தப் போராட்டம் இடம்பெறுகிறது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,10)

## பொலிஸ்...

நெடுந்தீவு பகுதியில் கொலை செய்யப்பட்ட இளைஞனுக்கு நீதி கோரி மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த போராட்டமானது நெடுந்தீவு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்றுள்ளது.

நெடுந்தீவு ஏழாம் வட்டாரத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை அடித்து கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த நிலையில், பிரேத பரிசோதனையின் பின் நேற்று முன்தினம் இரவு சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்ட நிலையில் நேற்று இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று அதன் பின்னர் நல்லடக்கத்திற்காக சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இதன்போது, மக்கள் சடலத்தை தோள்களில் சுமந்தவாறு நெடுந்தீவு பொலிஸ் நிலையம் முன்பாக கொண்டு சென்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர் ஒருவர் ஏற்கெனவே கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த நிலையில், குறித்த கொலையுடன் சம்பந்தப்பட்ட ஏனைய மூவரையும் விரைவாக கைது செய்யுமாறு கோரி மக்கள் சடலத்துடன் சென்று நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து கொலை செய்யப் பட்ட இளைஞனின் சடலம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (ம-7,10)

## கல்லுண்டாய்...

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம், கல்லுண்டாய் பகுதி மக்கள் அவர்களது குடியேற்ற திட்டத்திற்கு அருகாமையில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

கல்லூண்டாய் குடியேற்றத் திட்டப் பகுதியில் ஜே/135, ஜே/136 என இரண்டு கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. ஆனால் மொத்தமாக 88 குடும்பங்கள் தான் வசிக்கின்றன. ஜே/135 கிராம சேவகர் பிரிவில் சுமார் 27 குடும்பங்கள்தான் உள்ளன. ஏனையோர் ஜே/136 கிராம சேவகர் பிரிவில் தான் உள்ளனர்.

இரண்டு கிராமங்களையும் பிரிப்பதற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் அனுமதியுடன், ஜேர்மனியை சேர்ந்த பெண் ஒருவரின் நிதியில் கட்டடம் ஒன்று கட்டப்படுகிறது. இந்த கட்டடம் ஜே/135 பகுதியைச் சார்ந்ததாகவே உள்ளது. இதனால் ஜே/136 பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கட்டடம் யாருக்காக, எந்த நோக்கத்திற்காக, எந்த நிர்வாகத்தின் கீழ் கட்டப்படுகின்றது என்ற எதுவும் எமக்கு தெரியாது. இது குறித்து கிராம சேவகரை கேட்டபோது, அது சம்பந்தமான எந்தவொரு உத்தியோகபூர்வ தகவலும் தனக்கு வழங்கப்படவில்லை என கூறுகிறார் என்றனர்.

சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரே இதில் தலையிட்டு குழப்பத்தை ஏற்படுத்துகின்றார். கிராம சேவகரா சமுர்த்தி உத்தியோகத்தரா என்ற குழப்பத்தில் நாங்கள் உள்ளோம். இரண்டு பகுதி மக்களும் சந்தோஷமாக இருந்தோம். ஆனால் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் இரண்டு பிரிவு மக்களையும் பிரித்து பிரச்சினையை உண்டாக்குகின்றார்.

ஏதாவது தேவைக்கு அலுவலகத்துக்கு சென்றாலும் அங்கு சமுர்த்தி உத்தியோகத்தர் இல்லை.

சமுர்த்தி உத்தியோகத்தருக்கு இடமாற்றம் கிடைத்தும் கூட அவர் செல்லாமல் இருக்கின்றார். இரண்டு கிராம சேவகர் பிரிவுகளையும் இணைத்து சந்தோஷமாக செயற்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை என்றனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகளை ஏந்தி கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7,10,33)

## 5 வாள்களுடன்...

மானிப்பாய், நவாலி பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவரே நேற்றுக் காலை யாழ். பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

விசாரணையின்போது அவரது வீட்டில் இலக்கத்தகடு அழிக்கப்பட்ட ஒரு வகை மோட்டார் சைக்கிள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, அவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெவ்வேறு அளவுகளில் 5 வாள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (ம-7,10)

## அல்...

3 மணியளவில் குறித்த இளைஞன் விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10,60)

## பௌத்...

விருத்தியடைந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு மஹரஹத் மிஹிந்து போதித்த தர்ம மார்க்கத்தைப் பயன்படுத்துமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

பொசன் தினம் என்பது இலங்கையின் தேசிய கலாசாரத்தின் தொடக்க நாளாக இலங்கை பௌத்தர்களால் என்றென்றும் கொண்டாடப்படும் புனிதமான நாளாகும்.

குறிப்பாக உள்ளூர் மண்ணில் உணவு உற்பத்தி செய்து, கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து விட்டு, சுல்ல ஹத்தி பதோபம சூத்திரத்தை அறிந்து இலங்கை அரசை தயார்படுத்த மிஹிந்து மஹரஹத் வழங்கிய அறிவுரையை இந்தத் தருணத்தில் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும்.

மேலும் பௌத்த மதத்தைப் பாதுகாத்து வளர்ப்பதற்கு அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள பொறுப்பு உரிய முறையில் நிறைவேற்றப்படும் என உறுதியளித்து அனைவருக்கும் பொசன் வாழ்த்துக்களையும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7,10)







































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்புகள்

Cashier, Counter staff, Store Keeper, Delivery Rider, Computer Operator, Maintenance Staff, கிளார்க், கிளீனர், விற்பனையாளர், உதவியாளர்


(1284)

074 083 3368, 077 773 3368

## கமக்காரர்களுக்கு

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 4 ஸ்ரோக் (4 STROKE) பவர் ஸ்பிறேயர் (POWER SPRAYER) 20 லீற்றர் கொள்ளளவு இப்பொழுது எம்மிடம். மெல்லிய சத்தத்துடன் நிம்மதியாக நீங்கள் வேலை செய்ய, அத்துடன் இலங்கையில் முதன்முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.

**"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"**



**ஆர் . என் . கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020
Hotline : 071 535 7799/ 071 973 9917

(1292)


## இலங்கையில் ஸ்மார்ட் கல்வி வேண்டும் - சஜித்

உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகள் ஸ்மார்ட் கல்வியை நடைமுறைப்படுத்தும் போது, நமது நாட்டில் பழங்கால கல்வி முறையே முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எனவே இதனை மாற்றியமைத்து ஸ்மார்ட் கல்வியைப் போன்று ஆங்கிலக் கல்வியும் முன்னெடுக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், குருநாகல் பகுதி பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் லேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வளங்கள் இல்லாத இடத்துக்கு வளங்களை வழங்கும்போதுகுறைபாடுகளுக்கு தீர்வுகளை காணும் போதும் அனைவரும் இணைந்துகொண்டு தம் மீது சேறு பூசும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-7,10)


### V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு

(C-0655)

## மில் வேலைக்கு ஆட்கள் தேவை

சம்பளம் 2500/= இற்கு மேல் (ஆண், பெண் இருபாலாரும்)

பழக விரும்புவோரும் அழைக்கலாம்.

(1306)

077 936 1356

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

(1269)

074 17 37 684

### அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்

குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Online Visa Appoinments
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services
- Travel Insurance
- Travel Itinerary

(C-0655)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு| சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241

### Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)



CIMS College
49A, Chapel Street,Jaffna.

(C-0655)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## மணப்பெண் தேவை

- கோண்டாவில், இந்து, கௌரவ குலம், 1991, விசாகம், Masters in Business Administration, Swiss மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இணுவில், இந்து, கௌரவகுலம், 1990, அனுசம், Quantity Surveyor, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கோண்டாவில், இந்து, கௌரவ குலம், 1990, ரேவதி, P.hd, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- காரைநகர், இந்து, கௌரவ குலம், 1985, பூசம், B.Sc (Hons) UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பண்டத்தரிப்பு, இந்து, கௌரவ குலம், 1985, பரணி, Receptionist, Germany Citizen divorce, Vegetarian மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- ஊர்காவற்றுறை, இந்து, கௌரவ குலம், 1986, MBBS Doctor UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நீர்வேலி, இந்து, கௌரவ குலம், 1987, அத்தம் A/L, Business, France மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கொக்குவில், இந்து, கௌரவ குலம், 1987, அச்சுவினி, It and Pharmacy Technician, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை, இந்து, கௌரவ குலம், 1988, அச்சுவினி IT Engineering Degree, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நயினாதீவு, இந்து, கௌரவ குலம், 1981, ரோகிணி M.Sc, Computer Science, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(1285)

S.Sharma J.P
Astrologer
Tel : 077 539 3728
Whatsapp : 077 803 8193

## கல்யாட் வேலையாள் தேவை

சாவகச்சேரியில் உள்ள யாட் ஒன்றிற்கு வேலித் தூண் அரிவதற்கு அனுபவம் வாய்ந்த வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு :

(C-0656)

077 940 0963

## தென்னங்காணி விற்பனைக்கு

கிளாலி, எழுதுமட்டுவாள் என்னும் முகவரியில் A9 வீதி எழுதுமட்டுவாள் சந்தியில் இருந்து 1Km தூரத்தில் 5 ஏக்கர் தென்னங்காணி (காய்த்துக்கொண்டு உள்ளது) விற்பனைக்கு உள்ளது.

குறிப்பு - தரகர் தேவையில்லை

(1280)

தொடர்புகளுக்கு:

077 172 7005, 077 978 9112

## வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிறுவனத்திற்கு காசாளர், கணினி அனுபவம் உள்ள சிட்டை எழுதுனர் உடன் தேவை.

ஆண் வயது 40 - 60
பெண் வயது 20 - 30

Note :
சுய விபரக்கோவையுடன் நேரில் வரவும்

(1301)

077 748 8093

## வேலையாட்கள் தேவை

நீர்வேலியில் இயங்கும் தச்சு தொழிலகத்திற்கு வேலையாட்கள் தேவை. (அனுபவம் உள்ளவர்கள்)

(1295)

தொடர்புகளுக்கு:

077 805 9203

## வேலையாட்கள் தேவை

நல்லூரில் இயங்கும் All Sale கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
ஆண் பெண் இருபாலாரும்
வயது (பெண்) : 25 - 35 வயதுவரை
வயது (ஆண்) : 30 - 45 வயது வரை

தொடர்புகளுக்கு:

(1296)

078 924 6276

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=

(1297)

**Golden Real Estate (pvt) Ltd**

077 029 4164,
077 329 4130, 077 294 1521

## Happy Supermarket - உரும்பிராய்

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 269/= | (Max)3Kg |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 280/= | (Max)3Kg |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 410/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 170/= | |
| 1 Kg அரிசி மா | - 205/= | |
| 1 Kg பெரிய கடலை | - 435/= | |
| 1 Kg வெள்ளைப்பச்சை | - 205/= | |
| 01 Ocean மீன் ரின் | - 380/= | ~~500/=~~ |
| 450g நெஸ்டமோல்ட் | - 749/= | ~~780/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3600/= | ~~3900/=~~ |
| 1 Kg பிருந்தா கறிமிளகாய்த் தூள் | - 1180/= | ~~1600/=~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 350/= | ~~450/=~~ |
| 750ml நல்லெண்ணை | - 1455/= | ~~1550/=~~ |
| 400g வட்டவல தேயிலை | - 999/= | ~~1140/=~~ |
| 70g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |

Max 02
400g Anchor
1015/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(1302)

Happy Supermarket
0777 8080 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.